**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.135/2024

**02.03.2026**

**P.W.1- எட்வின்பிரெடி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சொந்த ஊர் தூத்துக்குடி என்றால் சரிதான். நான் நண்பர்கள் மதுரையில் இருப்பதால் அடிக்கடி வந்து செல்வேன். 1, 2 பிரதிவாதிகளின் தந்தை பூவேந்திரன் என்னுடன் வேலை பார்த்த கீதா, சந்தோஷ் ஆகியோர்கள் மூலம் பழக்கம் ஆவார். கீதா, சந்தோஷ் ஆகியோர்கள் மதுரையில் ஹோட்டலில் என்னுடன் வேலை பார்க்கிறார்கள். நான் மதுரையில் உள்ள மேற்படி ஹோட்டலில் மேனேஜராக உள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணமானது பூவேந்திரன் சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். அவ்வாறு பூர்வீக சொத்து என்றால் பூவேந்திரனின் வாரிசுகளான 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரிதான். எனக்கு அடமானது வா.சா.ஆ.1 ஆவணத்தை பூவேந்திரன் மட்டும் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 1, 2 பிரதிவாதிகள் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன். மேற்படி வருமான வரி கணக்கில் மேற்படி பூவேந்திரக்கு அடமானமாக ரூ.5 லட்சம் கொடுத்ததை காண்பித்துள்ளேனா என்றால் எனது ஆடிட்டருக்கு தான் தெரியும். நான் மதுரையில் தமிழ்சங்கம் ரோட்டில் அலுவலகம் வைத்துள்ளேன். நான் அதிக வட்டிக்காக தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கடந்த 11.12.2020ம் தேதி பூவேந்திரன் அறிமுகமானார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தேதியில் ரூ.5 லட்சம் பணத்தை அடமானமாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் முன்பே கீதா, சந்தோஷ்

மூலமாக பேசிவிட்டு பணம் வாங்க வந்தார்கள். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருவதால் தான் அறிமுகமில்லாத நபருக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் கந்துவட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் தாவா சொத்து பூவேந்திரனுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியமில்லை என சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம், பூவேந்திரன் 11.12.2020ம் தேதிக்கு 1 வருடத்திற்கு முன்னரே பணம் வாங்கினார் என்றாலும், வட்டி கட்ட முடியாததால் பொறுப்புக்காக அடமான கடன் பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே கடன் கொடுத்திருந்தால் பூவேந்திரனின் வாரிசுகளிடம் கையெழுத்து பெற்றிருப்பேன் என்றாலும், மோசடியாக பூர்வீக சொத்து என்பதால் கையெழுத்து பெறவில்லை என்றால் சரியல்ல. பூவேந்திரன் மனைவி என் மீது மோசடி பத்திரம் ஏற்படுத்தியது சம்மந்தமாக காவல்துறையில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகார் விசாரணையில் பணத்தை திரும்ப தருவதாக உறுதி கூறினார். அவ்வாறு பணம் திரும்ப கொடுப்பதாக சொல்லியுள்ள விவரத்தை வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். கீதா, சந்தோஷ் ஆகியோர்களை சாட்சியாக விசாரிக்கலாம். என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.02 17:58:17 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.